1975 அக்டோபர் 30]

திரு. என். கிட்டப்பா: மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் குறைந்தபட்சம் ஈ.சி.ஜி. நிலையம் ஒன்றை இணைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தாலுக்கா மருத்துவ மனைகளில் வேறுபல அடிப்படைக் காரியங்கள் நடத்தப்பட வேண்டியிருக்கின்றன. அதற்கிடையில் இதற்கென தனி நிதி கிடைத்தால் உடனடியாக அதைச் செய்வதுபற்றி ஆலோசிக்கலாம்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை

* 132 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்த அடிப்படையில் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் டாக்டர்கள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது ?

(இ) டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) மருத்துவச் சட்டத் தொகுப்பு விதிகளின் (Medical Code) பிரகாரம் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதற்குரிய எண்ணிக்கைப்படி டாக்டர்கள் இருக்கிறார்கள்.

(இ) எழாது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் டாக்டர்களை நியமிக்கிறார்கள். நாட்டில் ஏராளமான பேர் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டு, படுக்கை வசதியில்லாமல், கீழே படுக்க வைக்கப்படுகிறார்கள். அந்த எண்ணிக்கையினையும் கருத்திற்கொண்டு டாக்டர்களை நியமித்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும், அதைச் செய்ய அரசு முன்வருமா ?

[1975 அக்டோபர் 30

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நோயாளிகள் ஏராளமான பேர் இருக்கிறார்கள் என்பதில் எந்த மாறுபாடும் இல்லை. ஆனால், வருகிற நோயாளிகளுக்கெல்லாம் படுக்கை வசதி அமைக்க முடியவில்லை. ஒரு கட்டடத்தில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை படுக்கைகள்தான் அமைக்க முடியும் என்ற விகிதாசாரம் இருக்கிறது. குறைந்தபட்சம் இத்தனை படுக்கைகளுக்கு ஒரு டாக்டர் என்ற விகிதாசாரமும் இருக்கிறது. ஒரு டாக்டருக்கு 25-26 நோயாளிகள் என்ற கணக்கு இருக்கிறது. அவர்கள் மருத்துவக் கல்லூரி ஆசிரியராக அல்லாத டாக்டராக-அசிஸ்டென்ட் சர்ஜனாக இருக்கவேண்டும். அவர்கள் இருக்கிறார்கள். அதற்கிடையில் எதிர்பாராத வகையில் அதிக எண்ணிக்கை வரும்போது அவர்களுக்கு எப்படியும் உடனடியாக சிகிச்சை கிடைக்கவேண்டும் என்பதற்கு படுக்கை இல்லாத முறையிலும்கூட, அவர்களை அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு கடமை உணர்வோடு மருத்துவர்கள் செய்கிறார்கள். அதை நாம் விகிதாசார எண்ணிக்கையில் சேர்த்தால் நம்முடைய அரசின் கடமையை நல்லமுறையில் நிறைவேற்ற முடியாமல் போகும்.

திருநெல்வேலி மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்

* 126 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுள் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பெறாமல் உள்ளவை எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருநெல்வேலி மாவட்டத்தில் 1974-75 ஆம் ஆண்டில் இருந்த 214 உயர்நிலைப் பள்ளிகளில் இதுகாறும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப் பெறாத பள்ளிகளின் எண்ணிக்கை 89 ஆகும். அமைக்கப்பட்டவை 125 ஆகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது இம்மாதிரியான உயர்நிலைப் பள்ளிகள் அதிகமாகச் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் நாடு பூராவிலும் இருக்கின்ற நேரத்தில், அப்படி